# இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடம்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் கீழ்வரும் பதவிக்கு பொருத்தமான தகைமையுள்ள நபர்களிடமிருந்து **07.08.2018** வரை விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும்.

**சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (சட்டம் மற்றும் ஆவணங்கள்)**

**தகைமைகள்**

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில்/ உயர்கல்வி நிறுவனமொன்றில் சட்டத்துறையில் இளமானிப் பட்டத்துடனான ஒரு சட்டத்தரணியாக இருப்பதுடன் தகைமை பெற்றதன் பின்னர் நீதிமன்ற அலுவல்கள், சட்டம் தொடர்பான வேலைகள் மற்றும் சட்ட ஆவணங்கள் தயாரிப்பதில் அரச அல்லது பிரபல்யமிக்க தனியார் நிறுவனமொன்றில் குறைந்தது 05 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

**அல்லது**

2. ஒரு சட்டத்தரணியாக இருப்பதுடன் சட்டத்தரணியாக தகைமை பெற்றதன் பின்னர் அரச அல்லது பிரபல்யமிக்க தனியார் நிறுவனமொன்றில் நீதிமன்ற அலுவல்கள், சட்டம் தொடர்பான வேலைகள் மற்றும் சட்ட ஆவணங்கள் தயாரிப்பதில் குறைந்தது 10 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

**சம்பள அளவுத்திட்டம்**

U-EX 2(II)]

Rs. 66,180 - 8x 1,335: 8 x 1,630 - 89,900p.m. as at 01.01.2020

பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் 17/2016(V) ஆம் இலக்க சுற்று நிரூபத்திற்கமைய மேற்கூறிய சம்பளத் திட்டமானது 2016 தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் 5 கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படும். முழு சம்பளத் திட்டமானது 2020 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்படும்.

அதற்கமைவாக 2018 ஆம் ஆண்டு ஆரம்ப சம்பள படி ரூபா. 52,814/- ஆகும். (இச்சம்பளத்திற்கு மேலதிகமாக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பணவுகள் வழங்கப்படும்.)

**தெரிவு :** கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் பெறும் விண்ணப்பதாரிகள் தெரிவுக்கு தகுதியானவர்களாகக் கருதப்படுவர்.

**குறிப்பு :** ‘அனுபவம்’ என்பது நீதிமன்ற அலுவல்கள், சட்டம் தொடர்பான வேலைகள் மற்றும் சட்ட ஆவணங்கள் தயாரிப்பதில் அரச அல்லது பிரபல்யமிக்க தனியார் நிறுவனமொன்றில் நிறைவேற்றுத்தரத்தில் (Executive Capacity) பெற்றுக் கொண்ட அனுபவம் பதவிக்குரிய தகைமைகளுக்கான அனுபவமாகக் கருதப்படும்.

**அனுகூலங்கள்**

- தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்களின் மாதாந்த சம்பளத்தின் 10% பல்கலைக்கழக ஊழியர் சேம இலாப நிதியத்திற்கு செலுத்துதல் வேண்டும் அதே வேளை தொழில் வழங்குனர் உத்தியோகத்தர்களின் மாதாந்த சம்பளத்தின் 15% வீதத்தினை அவர்களின் கணக்கில் வைப்பிலிடுவர் அதில் 8% பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்திற்கும் 7% பல்கலைக்கழக ஊழியர் சேம இலாப நிதியத்திற்கும் செல்லுத்தப்படும். இதற்கு மேலதிகமாக ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பல்கலைக்கழகம் அவரது மாதாந்த சம்பளத்தின் 3% தொகையினை பங்களிப்புச்செய்யும்.

- சிரேஸ்ட நிருவாக உத்தியோகத்தர்கள் 07 வருட சேவை முடிவின் பேரில் முழுச் சம்பளத்துடனான 01 வருட ஓய்வு விடுமுறை அல்லது சம்பளமற்ற 02 வருட ஓய்வு விடுமுறைக்கு உரித்துடையவராவார். இந்த ஓய்வு விடுமுறையில் வெளிநாடு செல்லும் உத்தியோகத்தர் அவரது துணைவியாருடன் செல்வதற்கான முழு விமானச் சீட்டினை பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்பங்களும் ஏனைய விபரங்களும்**

விண்ணப்பப்படிவம், தேவையான தகைமைகள் மற்றும் அது தொடர்பான தகவல்களை பல்கலைக்கழகத்தின் **www.seu.ac.lk** என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம். விருப்பமான நபர்கள் பல்கலைக்கழக இணையத்தளத்திலிருந்து தரவிறக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து ரூபா. 200.00 செலுத்திய பற்றுச் சீட்டினை இணைத்து அனுப்புதல் வேண்டும். இக் கட்டணத்தினை மக்கள் வங்கியின் அட்டாளைச்சேனை கிளையிலுள்ள **228-1001-9000-1704** எனும் இலக்கம் கொண்ட இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கணக்கிற்கு செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்படிவங்கள் சான்றிதல்களின் பிரதிகளுடன் பதிவுத்தபாலில் **பதிவாளர், இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், பல்கலைக்கழக பூங்கா ஒலுவில் - 32360** எனும் முகவரிக்கு **07.08.2018**ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் கடித உறையின் இடதுபக்க மூலையில் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தங்களது விண்ணப்பங்களை நிறுவனத் தலைவருடாக அனுப்புதல் வேண்டும். ஆயினும் தங்களது முன் விண்ணப்பப்பிரதியை (Advance Copy) அனுப்ப முடியும. ஆயினும் திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நேர்முகப் பரீட்சையிற்கு கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

பூரணமற்ற, தெளிவில்லாத மற்றும் விண்ணப்ப முடிவு திகதிக்கு பிறகு பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளை நேர்முகப்பரீட்சைக்கு பட்டியல் படுத்தும் உரிமையை இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் தன்வசம் வைத்துள்ளது. நேர்முகப் பரீட்சைக்கு பட்டியல் படுத்தப்படும் விண்ணப்பதாரிகள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

பதிவாளர்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
பல்கலைக்கழக பூங்கா
ஒலுவில் - 32360
04.07.2018